MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



95
GLORIOUS
YEARS OF
REUNION
YEARS OF
REUNION

Printed Matter

**மறுஒன்றிப்பின் சிற்பி**
**மார் இவானியோஸ் ஆண்டகை**

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



மலர் 21 செப்டம்பர் 2025 இதழ் 9

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 03.09.2025 | Wednesday | | | Return from USA |
| 05.09.2025 | Friday | 5.00 pm | Kurusady Blessing and Feast Mass | Vettukuzhi |
| 06.09.2025 | Saturday | 4.00 pm | Holy Mass | Alappuzha |
| 07.09.2025 | Sunday | 7.30 am<br>10.30 am<br><br>4.00 pm<br>5.00 pm | Feast Mass<br>Homily<br>CSI Gathering<br>Flag Pole Blessing<br>Feast Mass | Konam<br><br>Kuttimavilai<br>Koikalthoppu<br>Pallukuzhy |
| 08.09.2025 | Monday | 3.00 pm<br>6.00 pm | UCC Meeting<br>Feast Mass | Nadaikavu<br>Surulacode |
| 13.09.2025 | Saturday | 2.00 pm<br>6.30 pm | MCMF Gathering<br>Bible Convention - Kaliyakkavilai Dist | Mariagiri<br>Nadaikavu |
| 14.09.2025 | Sunday | 7.00 am<br>5.30 pm | Feast Mass<br>Hall Blessing | Navalkadu<br>Panachamoodu |
| 19.09.2025-20.09.2025 | Friday - Saturday | | Reunion Day Celebration | Pathanamthitta Diocese |
| 21.09.2025 | Sunday | 5.30 pm | Feast Mass | Sooriyacode |
| 27.09.2025 | Saturday | | Priestly Jubilee Celebration – Fr. Geevarghese Chankkiath | Thuvaiyoor |
| 28.09.2025 | Sunday | 2.00 pm<br><br>5.00 pm | MCA Gathering<br><br>Bible Convention - Kollemcode District | Pastoral Centre Kuzhithurai<br><br>Manjathoppu |
| 29.09.2025 | Monday | 9.00 am | Marriage | Nadaikavu |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 செப்டம்பர் 2025 இதழ். 9

**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*



மலர். 22 ஆகஸ்ட் 2025 இதழ். 8

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church Bulletin of the Diocese of Marthandam




**முக்கியமான நாட்கள்**
செப்டம்பர் 2025

மலர். 22 செப்டம்பர் 2025 இதழ். 9

| | |
|---|---|
| 04 | தேசிய வனவிலங்கு தினம் |
| 05 | ஆசிரியர் தினம் |
| 08 | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| 08 | மன்னிப்பு தினம் |
| 13 | நேர்மறை சிந்தனை தினம் |
| 15 | பொறியாளர் தினம் |
| 15 | சர்வதேச ஜனநாயக தினம் |
| 17 | சர்வதேச நாட்டுப்புற இசை தினம் |
| 17 | உலக நோயாளி பாதுகாப்பு தினம் |
| 18 | சர்வதேச சம ஊதிய தினம் |
| 21 | உலக நன்றியுணர்வு தினம் |
| 21 | சர்வதேச அமைதி தினம் |
| 22 | உலக ரோஜா தினம் |
| 27 | உலக சுற்றுலா தினம் |
| 28 | உலக நதிகள் தினம் |
| 29 | உலக இதய தினம் |

## உள்ளடக்கம்

1. Circular 03
2. கொய்னோனியா 2025 14
3. குருமட செய்திகள் 14
4. மறைதூதுப் பணிக்குழு 15
5. குருக்களின் தியானம் 15
6. மறைபரப்பு தளச் செய்திகள் 16
7. மேரி மக்கள் துறவற சபை 17
8. MIDS 18
9. Health for One Million (Hom) 20
10. மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, இலவுவிளை 21
11. திருமண ஆயத்தப்பயிற்சி 21
12. Hom - Special School for the Mentally Retarded 22
13. MCA 24
14. மறைவட்ட செய்திகள் 25
15. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 30
16. இம்மாதம் நினைவு கூர 31
17. Bishop's Diary 32

*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**உயர் பேராயர் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
காதோலிக்கா பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 2/2025

## 95-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை 2025 செப்டம்பர் மாதம் 20-ம் நாள் 95-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவையும் திருஅவை சங்கமத்தையும் கொண்டாடுகின்றது. வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையால் ஏற்றிவைக்கப்பட்ட மறுவொன்றிப்பின் ஒளி 95 ஆண்டுகளாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. இத்திருஅவை வாயிலாக கடவுளின் கருணையின் மிகுதியையும், பேரன்பையும் நாம் அனுபவமாக்கிக் கொண்டிருக்கின்றோம். நம்மை வழிநடத்தும் இறைவனுக்கு திருஅவையார் இணைந்து நன்றி சொல்லும் தருணமே மறுவொன்றிப்பு விழா கொண்டாட்டங்கள். 95-வது மறுவொன்றிப்பு ஆண்டு விழாவினை பத்தனம்திட்டை மறைமாவட்டம் பொறுப்பேற்று

நடத்துகிறது. நிகழ்வுகள் செப்டம்பர் மாதம் 16 முதல் 20-ம் தேதிவரை நடைபெறவுள்ளன. நமது திருஅவையின் திருப்பணிகளுக்கு வலுவூட்டி வழிநடத்துகின்ற கடவுளின் கருணைக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

95 வருடங்கள் ஆசீர் நிறைந்த வருடங்களாக அமைந்தன. திருஅவையின் திருப்பணிகளுக்காக தங்களை சுயஅர்ப்பணம் செய்த பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரின் சிறந்த வாழ்வை இறைவனின் திருமுன் நன்றியுடன் நினைவுகூர்வோம்.

மறுவொன்றிப்பு முயற்சிகளும் ஒன்றிப்புப் பணிகளும் நம் திருச்சபையின் திருப்பணிகளாக தரப்பட்டுள்ளன. பல்வேறு திருஅவை சமூகங்களை ஒன்றிணைக்கும் திருப்பணியில் நம்முடைய திருஅவை தனிக்கவனம் செலுத்துகிறது. ஒன்றிப்பின்மை சமூகத்தில் எதிர்சாட்சியத்தையே கொடுக்கும். இரண்டாம் வத்திகான் திருச்சங்கத்தின் படிப்பினை இங்கே குறிப்பிடதக்கது. “பல கிறிஸ்தவ சமூகங்கள் தங்களே கிறிஸ்து இயேசுவின் மரபுச் செல்வமென மக்கள் முன் உரிமை கொண்டாடுகின்றனர். தாங்கள் ஆண்டவரின் சீடர்களென அவையெல்லாம் கூறிவிடுகின்றன; இச்சமூகங்கள் வேறுபட்ட உணர்வுகளை கொண்டிருக்கின்றன. வெவ்வேறான பாதைகளில் நடக்கின்றன. இதனால் கிறிஸ்துவே பிளவுபட்டிருக்கிறார் என்றே தோன்றுகிறது. இப்பிளவு கிறிஸ்துவின் உள்ளத்திற்கு வெளிபடையாகவே முரண்படுகிறது; உலகிற்கு இடறலாக உள்ளது. படைப்பிற்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கும் தூய்மைமிகு, பணிக்கும் தீங்கு விளைவிக்கிறது” (கிறிஸ்தவ ஒன்றிப்பு, எண் 1). மறுவொன்றிப்பு ஆண்டுவிழா கொண்டாட்டங்கள் ஒன்றிப்பின் பாலம் அமைக்கும் பொறுப்பைக் குறித்து உணர்த்தும் நிகழ்வாக அமையட்டும்.



**95-ம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழா நிகழ்வுகள் :**

95-ம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழா 2025 செப்டம்பர் 16-ம் தேதி முதல் 20-ம் தேதிவரை அடூர் மார் இவானியோஸ் நகரில் (All Saints Public School) நடைபெறவுள்ளது. பத்தனம்திட்டை மறைமாவட்டம் பொறுப்பேற்று நடத்தும் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் திருஅவை சங்கமும் ஆசீர்வாதமாக அமைய அனைவரும் இறைவேண்டல் செய்வோம். 2010-ம் ஆண்டு நிறுவப்பட்ட பத்தனம்திட்டை மறைமாவட்டம் வழியாக கடவுள் திருஅவைக்கும் சமூகத்திற்கும் தந்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்வோம். மறுவொன்றிப்பு நிகழ்வுகளை தலைமையேற்று நடத்தும் மேதகு ஆயர் சாமுவேல் மார் ஐரேனியோஸ் ஆண்டகையையும், மேனாள் ஆயர் யூஹானோன் மார் கிறிஸ்ஸோஸ்டோம் ஆண்டகை, குருக்கள், துறவிகள், இறைமக்கள் ஆகிய அனைவரையும் கடவுளின் திருமுன் ஒப்புக்கொடுத்து செபிப்போம். ஆடம்பர கூட்டுத்திருப்பலி, நற்கருணை ஆராதனை, இறைவார்த்தை பகிர்வு, இயக்கங்களின் சங்கமங்கள் போன்றவற்றில் நீங்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறேன். நடைபெறும் நிகழ்வுகளை குறித்து நினைவூட்ட விரும்புகிறேன். செப்டம்பர் மாதம் 16-ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடிப்பவனிக்கு வரவேற்பும் இன்னிசை நிகழ்வும் நடைபெறும். 17, 18 புதன், வியாழன் ஆகிய இரண்டு நாட்கள் மாலை 5.30 மணி முதல் 8.00 மணி வரை இறைவார்த்தை பகிர்வும், நற்கருணை ஆராதனையும் நடைபெறும். அருட்தந்தை டானியேல் பூவண்ணத்தில் இதற்கு தலைமையேற்று அருளுரை வழங்குவார். 19-ம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 1.30 முதல் 4.30 மணி வரை இயக்கங்களின் சங்கமும் மாலை 5.30 மணிக்கு நிக்கியா பொதுசங்கத்தின் 1700-ம் ஆண்டுவிழா கூட்டமும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. 20-ம் தேதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆடம்பர கூட்டுத்திருப்பலியும்

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாட்டின் நூற்றாண்டுவிழா நிறைவு கூட்டமும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஆயர் திருநிலைப்பாட்டின் நூற்றாண்டு விழா நிறைவு கூட்டத்தை மாண்புமிகு கேரளா முதலமைச்சர் துவங்கி வைப்பார். அன்பின் விருந்துடன் நிகழ்வுகள் நிறைவடையும்.

**மறுவொன்றிப்பு நூற்றாண்டுவிழா : திருவழிபாட்டின் ஆண்டு துவக்கம்.**

2030-ம் ஆண்டு செப்டம்பர் 20-ம் நாள் நடைபெறவிருக்கும் மறுவொன்றிப்பு நூற்றாண்டு விழாவிற்காக நாம் ஆயத்தம் செய்து வருகின்றோம். திருச்சபையை புதிதாக்கம் செய்யவும், ஆன்மீக வளர்ச்சி காண செய்யவும் கடந்த ஆண்டு முதல் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தி வருகின்றோம். இறைவார்த்தை ஆண்டை நாம் நிறைவு செய்துள்ளோம். வாழ்வு தரும் வார்த்தையின் ஆழங்களுக்கு கடந்து சென்று இறைவார்த்தையை வாழ்வாக்கும் நடைமுறைக்கு வந்து சேர முயற்சித்தோம். 2025 செப்டம்பர் 20 முதல் 2026 செப்டம்பர் 19 வரை ஓராண்டு காலத்தை திருவழிபாட்டின் ஆண்டாக அனுசரிக்கின்றோம். திருவழிபாட்டை குறித்து தெளிவான அறிவும் உணர்வும் இல்லையெனில் ஆராதனை ஒரு ஈடுபாடற்ற செயலாக மாறிவிடும். திருவழிபாட்டு முறையை குறித்து திருஅவை மக்களுக்கு தெளிந்த அறிவும் உணர்வும் இருக்குமானால் அது அவர்களை ஆழ்ந்த இறையனுபவத்திற்கு இட்டுச்செல்லும். "ஆவியிலும், உண்மையிலும் ஆண்டவரை ஆராதிப்போம்" (யோவா 4:24) என்னும் கருத்து இவ்வாண்டின் மையசிந்தனையாக அமைகிறது. ஆன்மீக மைய அருள்வாழ்வு நமது திருஅவைக்கு அடித்தளமாக அமைகிறது. திருச்சபையினர் அனைவரும் திருவழிபாட்டில் ஈடுபாட்டோடு பங்கேற்க வேண்டுமென்று திருஅவை விரும்புகிறது. மறுவொன்றிப்பு ஆண்டுவிழா மற்றும் திருஅவை சங்கமத் திடலில் வைத்து, திருவழிபாட்டின் ஆண்டு



தொடங்கி வைக்கப்படும். நம்பிக்கை வளர்ச்சியும் புனிதப்படுத்துதலும் திருவழிபாட்டின் ஆண்டு மூலம் சாத்தியமாகட்டுமென வேண்டுகிறேன்.

**சிறப்பு விருந்தினர் :**

95-வது மறுவொன்றிப்பு ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக அந்தியோக்கியன் சுறியானி கத்தோலிக்க திருஅவை தலைவர் மோறோன் மோர் இக்கினாத்தியோஸ் யவுனான் பிதாப்பிதா கலந்து கொள்கின்றார். அவருடன் மேதகு ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் இணைந்த ஒரு குழு நமது நிகழ்வுகளில் பங்கேற்க வருகை தருகின்றனர். கோட்டயம் நற் Ephraem Ecumenical ஆராய்ச்சி நிலையத்தின் 40-ம் ஆண்டு விழா கொண்டாட்டங்களிலும் பிதாப்பிதா பங்கேற்பார்.

**சகோதரி சபைகளின் பங்கேற்பு**

நிக்கியா பொதுசங்கத்தின் 1700-ம் ஆண்டுவிழா இத்திரு நிகழ்வுகளுடன் இணைத்து நடத்தப்படுகிறது. இக்கூடுகையில் மார் தோமா கிறிஸ்தவர்களின் ஆயர் நிலை சபைகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும், மறைபணி தளங்களி லிருந்தும், துறவற இல்லங்களிலிருந்தும் இயன்ற அனைவரும் 20-ம் தேதி நடைபெறும் நிகழ்வுகளில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறேன். மறுவொன்றிப்பு தினத்தில் திருப்பலியின் போது சேகரிக்கப்படும் காணிக்கை இந்த ஆண்டு நிகழ்வுகளை பொறுப்பேற்று நடத்தும் பத்தனம்திட்டை மறைமாவட்டத்தின் பொது சேவை திட்டங்களுக்காக வழங்கப்படும். திருப்பலியில் பங்கேற்கும் வழிபடும் சமூகம் காணிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக வரவேண்டுமென்று அன்புடன் நினைவூட்டுகின்றேன். நமது கூடுகை திருச்சபை மீது நாம் கொண்டிருக்கும் அன்பின் வெளிப்பாடாக அமையட்டும். வளர்ந்து வரும் இளைய தலைமுறைக்கு அது சான்றாக

அமையட்டும். ஆண்டுவிழா நிகழ்வுகளுக்கு தாராளமாக உதவி செய்யும்படி நினைவுப்படுத்துகிறேன். மறுவொன்றிப்பின் நூற்றாண்டு காண ஆயத்தமாகும் நமக்கு அனைத்துலக திருஅவையிலும், இந்தியாவிலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு பணிகளிலும் இறையாட்சியை கட்டியெழுப்பும் பணியிலும் ஈடுபாட்டுடன் செயல்பட சான்று பகிர கடமையுண்டு என்றுணர்ந்து செயல்படுவோம். ஆற்றல்மிகு ஆன்மீக வாழ்வே அதன் அடித்தளம். "உன் முழுஇதயத்தோடும், முழுஉள்ளத்தோடும், முழுஆற்றலோடும் ஆண்டவரை அன்பு செய்வாயாக" என்னும் கட்டளை நமது தியானப் பொருளாகட்டும். விழா நிகழ்வுகள் அதற்கு உதவட்டும்.

கடவுள் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. இறை அன்னையாகிய தூய கன்னிமரியாவினுடையவும், திருத்தூதர்களினுடையவும், குறிப்பாக, நம் தந்தையாகிய மார் தோமா சீடருடையவும் அனைத்து புனிதர்களுடையவும் வேண்டுதல்களால் இது அமைவதாக. ஆமென்.

*இவண்,*

ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்
திருஅவையின் உயர் பேராயர் - காதோலிக்கோஸ்

19-08-2025
காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்



## மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை 2025 -ஆம் ஆண்டு அன்னையர் தினத்தை முன்னிட்டு குடும்பநல ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர்

## வழங்கும் சுற்றறிக்கை

## MCMF நாள் மற்றும் புனித மோனிக்காவின் நினைவுத் திருநாள்

***அன்பு நிறைந்த கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, மதிப்பிற்குரிய அருட்பணியாளர்களே, அருட்சகோதரர்களே, துறவியரே ஆண்டவரில் அன்பிற்கினிய இறைமக்களே.***

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் அன்னையர்கள் அமைப்பாகிய 'மதர்ஸ் போறம்' (MCMF) என்ற அமைப்பின் விண்ணக பாதுகாவலியான புனித மோனிக்காவின் நினைவுத் திருநாளையொட்டி சபை அளவிலான அன்னையர் தினமாக ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட விசுவாச வாழ்வின் கருத்தூன்றிய சாட்சியாக MCMF செயல்பாடுகள் பங்குத்தளம் முதல் சபைத்தளம் வரை வளர்வதற்கு உதவியாக செயல்பட்ட அனைவரையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அனைத்து தாய்மார்களுக்கும், விசுவாசிகள் அனைவருக்கும் MCMF நாளினுடைய வாழ்த்துக்களும் செபங்களும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகஸ்டு 24 ஞாயிற்றுக்கிழமை நம்முடைய அனைத்து பங்குகளிலும் மறைவட்டங்களிலும், மறைமாவட்டங்களிலும் MCMF தினமாக கடைபிடிக்க வேண்டுமென்று அன்புடன் நினைவூட்டுகின்றேன். தாய்மார்களின் சிறப்பினை அடையாளம் கண்டு MCMF வளர்ச்சிப் பணிகளில் எவ்வாறு பங்கு கொள்ளலாம் என்று ஆலோசித்து திட்டங்கள் தீட்டவும் அன்போடு அழைக்கின்றேன். அதுபோன்று புனித மோனிக்காவின்

எடுத்துக்காட்டான வாழ்க்கையை தாய்மார்களின் வாழ்க்கையிலும் ஏற்றுக்கொண்டு செயல்வடிவம் கொடுக்க உதவுகின்ற வண்ணம் திட்டங்களும் வகுக்க கேட்டுக் கொள்கின்றேன்.

"என்னை இவ்வுலகிற்கு கொண்டுவர என் தாய் ஒரு முறை மட்டுமே மகப்பேறு வேதனை அனுபவித்தார்கள். ஆனால் எனக்கு நிலை வாழ்வளிக்க கடினமான துன்பத்தை நீண்ட நாள் அவள் அனுபவிக்க வேண்டியதாயிற்று." மனமாற்றம் அடைந்த பின்னர் புனித அகுஸ்தினார் கூறிய வார்த்தைகள் இவை. புனித மோனிக்காவின் கண்ணீரும், வேண்டுதல்களும் பாவத்தின் படு குழியில் கிடந்த அகஸ்தீனாரை புனித அகஸ்ட்டினாக மாற்றியது, அப்புண்ணியவதியின் தியாகம் நிறைந்த வாழ்வாலேயாகும். துரோகம் புரிகின்றவரை மன்னித்து அவர்களின் மனமாற்றத்திற்காக இறைவேண்டல் செய்வது மனித வாழ்விற்கு சுலபமான ஒன்று அல்ல. நரகத்திற்கு இணையான சூழலிலும், தன் மகனின் ஒழுங்கீனமான நடத்தையின் விளைவாக வந்த துன்பங்கள் வருத்தியபோதும் அனைவரும் விண்ணகப்பேற்றை அடைய வேண்டும் என்ற நிலையை உறுதிப்படுத்தும் வரை நிரந்தர இறைவேண்டல் செய்த புனித மோனிக்கா தாய்மார்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு. அவளின் உறுதித்தன்மை அதனாலேயே புகழ் பெற்றோங்கியது. தீமையிலிருந்து தீமையை நோக்கி தன் மகன் பயணிப்பதையும், உண்மை விசுவாசத்திற்கு எதிராக தன் மகன் பிரச்சாரம் செய்வதையும் நேரடியாகக் கண்ட அத்தாய் கண்ணில் கண்ணீருடன் 17 வருடங்கள் தன் உடனிருப்பாலும் அதற்கு முடியாத தருணங்களில் மனதளவிலும் பின் தொடர்ந்தாள். இப்புவியில் வாழும்போது நிலைவாழ்வை சொந்தமாக்க நாம் முயல்வதே முக்கியமானது என அப்புனிதை நன்கு அறிந்திருந்தார். இறுதியில் தன் மகனின் மனமாற்றத்தைக் காண பெரும் பேறு



அடைந்த போது "இனி என்ன நான் இங்கு செய்ய வேண்டும்" என்பதே புனித மோனிக்காவின் சிந்தனையாக இருந்தது. ஒவ்வொரு நாளும் தவறாமல் திருப்பலியில் பங்கு கொண்டிருந்த புனித மோனிக்கா இயேசுவின் திருஇரத்தத்தின் விலையினை நன்கு அறிந்திருந்தார். "பேறுபெற்ற தாய்" என்று புனிதையை நாமின்று அழைக்கும் போது மிகவும் துன்பங்கள் அனுபவித்த ஒரு தாயாக இருந்தார் புனித மோனிக்கா என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அனுதின வாழ்க்கையில் தாய்மார்கள் சந்திக்கின்ற இன்னல்கள் எளிதானவை அல்ல. குடும்ப வாழ்க்கை தொடங்கி மரணப்படுக்கை வரையுள்ள பயணம் துன்பங்கள் நிறைந்ததேயாகும். இடைவிடாத செபத்தினுடையவும், கடினமான உழைப்பினுடையவும், பேறுபலனையே புனித மோனிக்காவின் வாழ்க்கை நமக்கு எடுத்துச் சொல்கிறது. எனவே 'எதிர்நோக்கின்' எடுத்துக்காட்டாக புனித மோனிக்கா விளங்குகிறார் என்று தூய திருஅவை அவரை கொண்டாடுகின்றது. 17 வருடங்கள் அப்புனிதை விசுவாசத்துடன் காத்திருந்து செபித்தார். "தன்னுடைய வேண்டுகோள் நிறைவேறிற்று என்று விசுவாசித்தாள்". இவ்வுலக வாழ்வை நிறைவு செய்த புனித மோனிக்கா நம்முடன் கூறுவது, கடவுள் பதிலளிக்கின்ற அந்த நாள் வரை பொறுமையுடன் காத்திருந்து செபிக்க வேண்டும் என்பதேயாகும். "உங்களைப்பற்றி ஆண்டவர் இடும் கட்டளை என்னவென்று நான் கேட்டறியும் வரை பொறுத்திருங்கள்" (எண்ணிக்கை 27:14). புனித லூக்கா நற்செய்தியில் நாம் சந்திக்கும் கூன்விழுந்த பெண்ணின் சாட்சியம், பதினேழு வருடங்களின் காத்திருப்பினுடைய பதிலேயாகும் (லூக் 13:11-17) தொழுகைக் கூடத்திற்கு வந்த அப்பெண் ஒவ்வொரு நாளும் செபத்துடன் காத்திருந்தாள். ஆனால் கடவுள் அவளுக்கான குணப்படுத்துதலை கருதி வைத்திருந்து, 18 வருடங்களுக்கு பிறகே நோயின் ஆதிக்கத்திலிருந்து அவள்

குணம் அடைந்தாள். புனித மோனிக்கா தன் 17 வருட செபத்தின் வழியாக நம் ஒவ்வொருவருக்கும் எடுத்துக்காட்டாக மாறுகிறார்.

புனித பவுலடியார் இவ்வாறு நமக்கு கற்பிக்கின்றார். "நீங்கள் கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புக்கள்'' (1கொரி 12:27). குடும்பங்களே அகில உலகத்திருச்சபையின் ஆற்றலும் உயிர் சக்தியுமாக விளங்குகிறது. குடும்பத்தின் முதுகெலும்பாக (நெடும் தூணாக) இருக்கின்ற அன்னையர்கள் வழியாகவே குடும்பங்களுக்கு ஆன்மீக அனுபவங்கள் வழங்க இயலும். திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் இவ்வாறு கூறுகிறார்: "ஒரு தாயின் உடனிருப்பு ஒரு சமூகத்தின் அடிப்படை செயல்பாட்டிற்கும், குடும்பத்தின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் விலை மதிக்க முடியாதது ஆகும்''. எல்லா முறையிலும் இதை அங்கீகரிப்பது நமது கடமையாகும். குடும்பங்களில் குடும்ப செபத்திற்கு எவரும் ஆர்வம் காட்டாத வேளையில் அங்கு செபத்திற்கு வழகாட்டுதல் வழங்கி குடும்பங்களை இறைசன்னிதியில் உயர்த்த நம்முடைய தாய்மார்கள் முயற்சி எடுக்க வேண்டும். விசுவாசத்தை இழந்து போகாத ஒரு தலைமுறையை கிறிஸ்துவின் சாட்சிய சமூகமாக மாற்ற அன்னையர்களின் முயற்சி இக்காலகட்டத்திற்கு தேவையான ஒன்றே.

இறைவார்த்தை ஆண்டில் உருவாகியுள்ள நம் பேரார்வம் குடும்பங்களில் நிரம்பி வழிய தாய்மார்கள் செய்துவருகின்ற எல்லா பணிகளையும் அன்புடன் நினைவு கூருகின்றேன். இறைவார்த்தை வாசித்தும், முழுவிவிலியம் எழுதியும், இறைவார்த்தையை மையமாகக் கொண்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டு தனிப்பட்ட முறையிலும், பங்கு தளங்களிலும், இவ்வாண்டில் பயணித்தோம். இறைவார்த்தையை ஆர்வமுடன் வாசிக்கின்ற, வாழ்கின்ற



குடும்பங்களுக்கு அன்னையர்கள் தனிப்பட்ட வழிகாட்டுதல் வழங்க வேண்டும். இறைவார்த்தையின் ஒளியில் நம் குடும்பங்களை புதிதாக்கம் செய்வோம். சபை அளவிலான தாய்மார் சங்கம் MCMF கொண்டாட்டம் "ஜனனி 2024" திருவல்லா உயர் மறைமாவட்டத்தில் வைத்து மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதனை ஒழுங்குபடுத்திய திருவல்லா உயர்மறைமாவட்ட MCMF உறுப்பினர்கள், இயக்குனர் தந்தையையும் வாழ்த்துகின்றேன்.

வருகின்ற ஆகஸ்டு 28-ம் தேதி நடக்க இருக்கின்ற சபை அளவிலான MCMF தின கொண்டாட்டம் "ஜனனி 2025" -ற்காக தயாராகிக் கொண்டிருக்கின்ற பத்தேரி மறைமாவட்டத்திற்கும், மறைமாவட்ட ஆயருக்கும், மறைமாவட்ட MCMF உறுப்பினர்களுக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். கடந்த இரண்டு வருடங்களாக வெவ்வேறு தளங்களில் MCMF -க்கு வழிகாட்டுதல் வழங்கிய ஒவ்வொருவரையும் பாராட்டுகின்றேன். அனைவருக்கும் ஒருமுறை கூட MCMF நாளினுடையவும் புனித மோனிக்காவின் நினைவுத் திருநாளினுடையவும் அனைத்து வாழ்த்துக்களையும் ஆசிரையும் கூறிக்கொள்கின்றேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*என்றும் அன்புடன்,*

† மேதகு ஆயர் **யூஹானோன் மார் தியோடோஷியஸ்**
குடும்பநல ஆயர் மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்
மூவாற்றுபுழை மறைமாவட்ட ஆயர்

10-08-2025
காதோலிலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

# ‘கோய்னோனியா 2025’

மறைமாவட்ட குருக்களின் விண்ணகப் பாதுகாவலரான புனித ஜாண் மரிய வியானியின் திருநாளை முன்னிட்டு கழுவன்திட்டையில் அமைந்துள்ள புனித ஜாண் மரிய வியானி குருக்கள் இல்லத்தில் வைத்து குருக்கள் ஆணையவும் குருக்கள் நல நிதியமும் இணைந்து ஆகஸ்ட் மாதம் 4-ம் தியதி திங்கட்க்கிழமை அன்று ‘கோய்னோனியா 2025’ என்ற தலைப்பில் குருக்களுக்கான கூடுகை ஒழுங்குப்படுத்தியது. இக்கூடுகையில் மறைமாவட்டத்தி லுள்ள அனைத்து குருக்களும் கலந்துகொண்டு குருத்துவ உறவையும், தோழமையும் வலுபடுத்தினார்கள்.

# குருமட செய்திகள்

- 04.08.2025 அன்று குருக்களின் பாதுகாவலரான புனித ஜாண் மரிய வியானியின் நினைவு நாளானது மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினத்திற்கு சிறப்பூட்டும் வண்ணமாக புதுகுரு அருட்தந்தை பால்சன் அடிகளார் திருப்பலி அற்பித்து ஜெபித்தார்.
- ஆகஸ்ட் 15 -ஆம் தேதியன்று சுநந்திர தினமானது நன்முறையில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினத்தில் புது குரு அருட்தந்தை றோபின் அடிகளார் திருப்பலி அற்பித்ததோடு, நம் நாட்டின் தேசிய கொடியை ஏற்றி சுதந்திர தினத்தின் வாழ்த்துதல்கள் தெரிவிக்கவும் செய்தார்.
- 23.08.2025 சனிக்கிழமை அன்று மாதாந்திர தியானமானது நடைபெற்றது. அருட்தந்தை ரெதீஷ் ரிச்சார்ட் அவர்கள் இத் தியானத்தை வழிநடத்தினார்.



# மறைத்தூது பணிக்குழு

- ஆகஸ்ட் மாதம் 9 -ஆம் தேதி தாபோர் தியான இல்லத்தில் வைத்து மறைத்தூது பணியாளர்களின் கூடுகை நடைபெற்றது. அன்று மறைத்தூது பணியாளர்கள் தலைமையில் தியானம் நடைபெற்றது.
- ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் புனித குழந்தை தெரசா மலங்கரை கத்தோலிக்க திருச்சபை, புஷ்பகிரி பங்கின் இல்லங்கள் சந்திக்கப்பட்டது.
- ஆகஸ்ட் மாதம் 24 -ஆம் தேதி மறைத்தூது பணிக்குழு சார்பில் ஒரு நாள் தியானம் நடைபெற்றது. பங்குதந்தை ஜாண் ஷிபு மற்றும் பங்கு பேரவையினர் மறைத்தூது பணிக்குழு உறுப்பினர்களை நன்முறையில் உபசரித்தார்கள். ஏராளமான மக்கள் இந்த தியானத்தில் கலந்து கொண்டார்கள்.

# குருக்களின் தியானம்

இம்மாத குருக்களுக்கான தியானம் 12.08.2025 அன்று காலை 9 மணிக்கு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியானத்தை பேரருட்தந்தை அற்புத ராஜ் அவர்கள் வழி நடத்தினார்கள். இம்மாதாந்திர தியானத்தில் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# மறைபரப்பு தளச் செய்திகள்

❖ **இலவச மருத்துவ முகாம்**

தேவதானப்பட்டி தைநேசி அன்னை மலங்கரை கத்தோலிக்க ஆலயம் மற்றும் ஹோலி ரெடீமர் மருத்துவமனை நடத்தும் இலவச மருத்துவ முகாமானது ஆகஸ்ட் 21-ம் தேதி தேவதானப்பட்டி ஆலயத்தில் வைத்து மாலை 6.00 மணியிலிருந்து நடத்தப்பட்டது. ஹோலி ரெடீமர் மருத்துவமனையிலிருந்து மருத்துவர் குழு மற்றும் செவிலியர் குழுவாக ஏறத்தாழ எட்டு பேர் கொண்ட குழு வந்து மக்களை சந்தித்தும் ஆலோசனைகள் வழங்கியும் உதவினர். சுமார் 200 பேர் ஆலோசனை பெற்று பயனடைந்தனர்.

❖ **சுதந்திர தின கொண்டாட்டம்**

நைநேசி மாதா ஆலயத்தில் சுதந்திர தினம் காலை 6.30 மணிக்கு காலை ஜெபம், ஆடம்பர திருப்பலியோடு ஆரம்பமானது. பின்னர் மாணாக்கர்களின் அணிவகுப்போடு திரு. ஜூலியன், பொறியாளர் அவர்கள் தலைமையில் தேசிய கொடி ஏற்றப்பட்டது. உண்மையான சுதந்திரம் உங்கள் உயர்வே என சிறார்களை ஊக்குவித்தார். தொடர்ந்து இனிப்பும் வழங்கப்பட்டது.


மாலையில் பேச்சு போட்டி, பாடல் போட்டி, விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. சுமார் ஆறு மணியளவில் தேவதானப்பட்டி மற்றும் புதிய மறைப்பரப்பு தளமான ஜம்புலிபுத்தூர் பெற்றோர் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. அன்பின் விருந்தோடு விழா இனிதே முடிவுற்றது.



# மேரி மக்கள் துறவற சபை

**அருள் தந்தை அவர்களுக்கு ஆதரஞ்சலிகள்**

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நற்செய்தி பணியாற்றி கிறிஸ்துவை அறிய செய்தவரும். மேரி மக்கள் துறவற சபையின் நிறுவினரும் ஆகிய மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞாலில் அவர்களின் 42-வது நினைவு திருநாள் 23.08.2025 அன்று அனுசரிக்கப்பட்டது



22.08.2025 அன்று மாலை 5.00 மணிக்கு சீறோ-மலபார் ஆராதனை முறையிலான திருப்பலியுடன் கல்லறையில் சிறப்பு ஜெபம் நடைபெற்றது. தொடர்ந்து 23.08.2025 அன்று காலையில் மேதகு ஆயர் ஜோஷ்வா மார் இக்னாதியோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலி அற்பித்தார்கள். தொடர்ந்து நினைவு கூட்டமும் கல்லறையில் தூப மன்றாட்டும் அற்பிக்கப்பட்டது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**வழிகாட்டுதல் பயிற்சி**

குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழியாக தற்போது 439 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. அவர்களில் 149 பயனாளிகளுக்கு 28.07.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழிகாட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்து திட்டத்தின் நோக்கம் மற்றும் வழிமுறைகள் குறித்தும், பயனாளிகள் திட்டத்திற்கு தகுந்த ஒத்துழைப்பு எவ்வாறு நல்கவேண்டும் என்றும் விளக்கி கூறினார்கள். பின்னர் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி வினிதா மற்றும் திருமதி ஜெசிந்தா ஆகியோர் திட்டத்தில் பயனாளிகளின் முக்கியத்துவம், அவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள், தொழில் துவங்கும் போது கவனிக்க வேண்டியவை ஆகியவை குறித்து தெளிவாக பயனாளிகளுக்கு பயிற்சியளித்தார்கள். பின்னர் பயனாளிகள் தாங்கள் இத்திட்டத்தின் வழியாக பெற்ற நன்மைகளை பகிர்ந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 142 பயனாளிகள் கலந்துகொண்டனர்.

**உதவித்திட்டங்கள்**

1. 16.07.2025 அன்று நாகர்கோவில் பணி மண்டலத்தின் 12 சுய உதவி குழுக்களில் உள்ள 48 உறுப்பினர்களுக்கு பல்வேறு செயல்பாடுகளுக்காக ரூபாய் 24,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.
2. 29.07.2025 அன்று கோல்பிங் திட்டத்தின் சார்பாக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 13 உறுப்பினர்களுக்கு பல்வேறு சிறுதொழில்கள் செய்ய ரூபாய் 13,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.



3. 29.07.2025 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 19 நோயாளிகளுக்கு ரூபாய் 95,000/- உதவித்தொகை வழங்கப்பட்டது.

**பிறநிகழ்வுகள்**

24.07.2025 அன்று எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் மற்றும் நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச பொதுமருத்துவம் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் முகாம் மஞ்சத்தோப்பு பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 86 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

27.07.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டுவரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 111 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு தேர்வு எழுதினர்.

18.08.2025 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் சிறப்பு கூட்டமானது மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண் ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் CRS நிறுவனத்தின் சார்பாக டெல்லி கிளையின் நிர்வாக இயக்குநர் திரு. செந்தில் குமார், ஆலோசகர் அருட்தந்தை செலஸ்டின், திருமதி ஜோமிமற்றும் சஞ்சனா ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் Leaders for Change குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் பங்குகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சாம்பியன்கள் மற்றும் விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் என மொத்தம் 30 பேர் பங்கேற்றனர்.

# HEALTH FOR ONE MILLION (HOM)
Diocese of Marthandam

- ❖ ஆகஸ்ட் மாதம் 6-ம் தேதி அமைப்பாளர்களின் கூட்டம் HOM அலுவலகத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுய உதவிக்குழு அமைப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர். பொறுப்பாளர்களாக அருட்தந்தை அஜீஷ் குமார், திரு. லிஸ்பின் (HOM), திருமதி செல்வி, திருமதி பகவதி, திருமதி வசந்தா, திருமதி புஷ்பலதா, திருமதி முத்துலெட்சுமி ஆகியோர் பங்கேற்றனர்.
- ❖ ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு பயிற்றுனர்கள் பயிற்சி திருச்சி புனித அன்னாள் அருட்சகோதரிகள் இல்ல வளாகத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள், MMM உறுப்பினர்களான திரு. ஜாண், திரு. பால்ராஜ், திரு. அருள்தாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். பொறுப்பாளர்களாக ஆயர் மார் ராஜேந்திரன் (தக்கலை மறைமாவட்டம்), அருட்தந்தை அஜீஷ் குமார் ஆகியோர் பங்கேற்றனர்.
- ❖ ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி புற்றுநோய் பாதித்த படுக்கை நோயாளிகளுக்கு மருத்துவ நல உதவி வழங்குதல் மார் எப்ரேம் வளாகம், குழித்துறையில் வைத்து நடைபெற்றது. இதில் சுமார் 35 நோயாளிகள் பங்கேற்று உதவி பெற்றனர்.
- ❖ ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி போதையில்லா பாதை விழிப்புணர்வு நிகழ்ச்சி தேனிகுளம் பங்கில் வைத்து நடைபெற்றது. நாகர்கோவில் ஸோணை சார்ந்த HOM மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். பொறுப்பாளர்களாக திரு. லிஸ்பின், திருமதி செல்வி, திருமதி வசந்தா மற்றும் 30 பேர் கலந்துகொண்டார்கள்.



# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

## Genesis Gala 2k25

2025-'26 மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் கல்வியாண்டிற்கான வணிக மேலாண்மை முதலாமாண்டு Genesis Gala - 2k25, 25/08/2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. Rev. Dr. பால் ரிச்சர்ட், (அதிபர், தேவசகாயம் பிள்ளை திருத்தலம்) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்கள் கல்லூரி தரும் வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும் என்று நல்லதொரு உரை ஆற்றினார். மனிதவள துறை மேலாளர் Pinaccle Infotech, Mis. Saranya Rajendran சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு MBA மாணவர்களின் தரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி சிறப்புரை ஆற்றினார்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 செப்டம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **12, 13** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

**நர்சிங் கல்லூரி மாணவிகள் சந்திப்பு**

1825 அன்று HOM சிறப்புப் பள்ளிக்கு மார்த்தாண்டம் Thasiah Nursing கல்லூரி மாணவர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியைகள் இணைந்து வருகை தந்திருந்தார்கள். தசைப் பயிற்சியாளர் திருமதி ஜென்னிங்ஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். HOM இயக்குநர் / தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். அதன் பிறகு Nursing கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் HOM சிறப்புப்பள்ளியின் வகுப்புகளை சந்தித்து சிறப்புக் குழந்தைகளுடன் உரையாடினார்கள். தொடர்ந்து நான்கு குழுக்களாக பிரிந்து சிறப்புக் குழந்தைகளுடன் Interaction நடைபெற்றது. இறுதியாக நடைபெற Concluding Ceremony-ல் மாணவர்கள் இறைவணக்கம், வரவேற்புரை, நடனம், பாடல் போன்ற கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்கள். நர்சிங் கல்லூரி மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். இறுதியாக தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் கல்லூரி ஆசிரியர்களான Dr. Brindha Mary, Dr. Bons Jenifer, Mrs. Vijila, Mrs. Ramya மற்றும் College Students ஆகிய அனைவருக்கும் நன்றிகளை கூறினார்கள். திருமிகு அலாய்சியுஸ் அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்தார்கள்.

18.07.2025 அன்று சிறப்புக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கான, பணியாளர்களுக்கான இணையதள பயிற்சி சிறப்புக் குழந்தைகளுக்கான Exposure Day -யும் நடைபெற்றது. இந்த பயிலரங்கத்திற்கு பம்பம் JCI தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வருகை தந்தார்கள். பம்மம் JCI -யின் தலைவர் திருமதி நிஷா அவர்கள் நிகழ்ச்சி குறித்து அறிமுக உரையாற்றினார்கள். சிறப்பு பள்ளியின் Admin Officer Ms. சின்சியா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். சிறப்புப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். JCI அமைப்பின் உறுப்பினர் டாக்டர் ஜெப்றின் அவர்கள் இயற்கை மருத்துவம் குறித்து உரையாற்றினார்கள். அவர்தம் உரையில் காலையில் டீ குடிப்பதற்கு பதில் தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும் காலையில் 6 மணிக்குள் எழும்ப வேண்டும். உடலை தூய்மைப் படுத்த வேண்டும் வைட்டமின் நிறைந்த E, K, B½ நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். வாரத்தில் 2 நாட்கள் மண் குளியல் செய்ய வேண்டும் என்றும் வல்லாரை, சங்கு புஷ்பம் டீ குடிக்க வேண்டும். இது நரம்பு வளர்ச்சிக்கு மிகவும் உதவும் என்னும் வடக்கு தெற்காக 8 -மாதிரி நடக்க வேண்டும் என்றும் கூறினார்கள். திரு, அபிஷேக் அவர்களால் ஆசிரியர்களுக்கு இணையதள பயிற்சி வழங்கப்பட்டது. திருமதி ஷீபா Disney Institutes அவர்களால் பெற்றோர்களுக்கு எம்பிராய்டிங் பயிற்சி வழங்கப்பட்டது. இறுதியில் தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

**சிறப்புக் குழந்தைகளுக்கான பயிற்சி உபகரணங்கள் வழங்குகல்**

20.06.2025 அன்று Adv. பால்ஜி அவர்கள் எம் சிறப்புக் குழந்தைகளின் சிறப்புக்கல்வி மேம்பாட்டிற்காக Teaching Learing Materials, Note Books, Colouring Book, Files உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள். முன்னதாக இயக்குநர்/தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் வரவேற்று வாழ்த்தினார்கள். தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் நன்றி கூறினார்கள்.

**Mar Ephraem பொறியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு சந்நிப்பு**

இலவுவிளை மார் எப்ரேம் முதலாம் ஆண்டு பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் HOM சிறப்புக் குழந்தைகளை 28.07.2025, 29.07.2025 மற்றும் 13.08.2025 ஆகிய நாட்களில் மூன்று குழுமமாக வருகை தந்து சந்தித்தார்கள். திரு. அலாய்சியுஸ் அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்தார்கள். சிறப்புப்பள்ளியின் தோற்றம் மற்றும் செயல்பாடுகள் குறித்த Documentory கல்லூரி மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டது. கல்லூரி மாணவர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். HOM இயக்குநர், தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் தலைமையுரையாற்றினார்கள். தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் நன்றி கூறினார்கள். இறுதி நாளில் கல்லூரி தாளாளர் அருட்தந்தை சதீஷ்குமார் அவர்கள் பங்கேற்று இறைவேண்டல் செய்தார்.

# MCA
## Diocese of Marthandam

- ஆகஸ்ட் 4-ம் தேறி குருக்களின் பாதுகாவலராகிய புனித ஜாண் மரிய வியானியின் திருவிழாவை முன்னிட்டு 03.08.2025 மற்றும் 10.08.2025 ஆகிய தியதிகளில் நமது மறைமாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான பங்குகளில் குருக்கள் சிறப்பிக்கப்பட்டார்கள்.
- ஆகஸ்ட் 16-ஆம் தியதி MCA சபாதல அளவிலான 'அரசியல் வலுவூட்டும் நிகழ்வில்' நமது மறைமாவட்டத்தில் இருந்து 9 நபர்கள் கலந்து கொண்டனர். YMCA அரங்கம் எர்ணாகுளம். (மூவற்றுப்புழ மறைமாவட்டம்) வைத்து நடைபெற்றது.



# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

### ❖ மறைவட்ட தினவிழா

மார்த்தாண்டம் மறைவட்ட தினவிழா 10-08-2025 அன்று மாலை 3.00 மணிக்கு ஆற்றூர் புனித அந்திரேயா ஆலயத்திலிருந்து பேரணியுடன் ஆரம்பமானது. பேரணியை அருட்தந்தை அஜீஷ் குமார் துவக்க உரையாற்றி ஆரம்பித்து வைத்தார். பேரணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண்சிஞ்ஞோர் ஜோஸ்பிறைட் அடிகளார் தலைமை தாங்கினார். மறைவட்ட குருக்கள் மற்றும் அருட்சகோதரிகள் பேரணியில் முன்னிலை வகுத்தனர். மேய்ப்புபணி அறிவுரைக்குழு உறுப்பினர்கள், பக்த இயக்கங்கள், பங்குமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். பேரணியானது வலியவிளை புனித அந்தோணியார் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் நிறைவுற்றது. பின்னர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்துக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண்சிஞ்ஞோர் ஜோஸ்பிறைட் தலைமை தாங்கினார். மறைவட்ட மேய்ப்புபணி அறிவுரைக்குழு பொருளர் திரு. T. அஜீஷ் ராஜ் அனைவரையும் வரவேற்றார். மேய்ப்புபணி அறிவுரைக்குழு செயலர் திரு. A. ஜாண் செயலர் அறிக்கை வாசித்தார். புனித சவேரியார் பொறியல் கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை காட்வின் செல்வ ஜஸ்டஸ் அவர்கள் சிறப்புரையாற்றினார். அருட்சகோதரி ராணி சேவியர் DM, திரு. M. பெனான்சிஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மறைவட்ட அளவில் பள்ளியில் 10-ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு பங்குக்கும் ஒரு மரக்கன்று வழங்கப்பட்டது. பொதுக்கூட்ட இறுதியில் திருமதி. செலின் நன்றி கூறினார். தொடர்ந்து ஒவ்வொரு பங்கும் ஒரு கலைநிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில் மறைவட்ட குருக்கள் செயலர் அருட்தந்தை கெபின் அடிகளார் வலியவிளை

பங்கு மக்களை வாழ்த்தி நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை வலியவிளை பங்குத்தந்தை அருட்தந்தை சதீஷ் குமார் மற்றும் பங்கு மக்கள், மேய்ப்புபணி அறிவுரைகுழு உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

## பனச்சமூடு மறைவட்டம்

❖ ஆகஸ்ட் மாதம் 31-ஆம் தேதி MCYM இளையோருக்கான மறைவட்ட அளவிலான கலைப் போட்டிகள் குளப்பாறை பள்ளிகூடத்தில் வைத்து நடைபெற்றது. மிகவும் உற்சாகத்துடன் எம் மறைவட்ட இளையோர்கள் போட்டிகளில் பங்கு பெற்று பரிசுகளை பெற்று பங்குகளுக்கு பெருமை சேர்த்தார்கள். இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மறைமாவட்ட அளவிலான இளையோருக்கான போட்டிகள் பங்கேற்பார்கள்.

## குலசேகரம் மறைவட்டம்

❖ இறை அன்னையினுடைய பிறப்பு திருவிழாவை முன்னிட்டு நமது குலசேகரம் மறைவட்டத்தில் அமைந்துள்ள சுருளோடு அடைக்கல அன்னை திருத்தலத்தின் திருவிழாவின் ஆயத்தமாக மறைவட்டத்தின் ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் அன்னையின் உருவம் ஏந்திய திருக்கொடியானது திருத்தலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மறைவட்ட முதன்மை குரு பேரருட் தந்தை பிராங்ளின் ஜோஸ், திருத்தல அதிபர் அருட்தந்தை ஆன்றோ ஜெபின் மற்றும் மறைவட்ட குருக்கள் முன்னிலையில் அடைக்கல அன்னையின் திருமுன்பாக நிறுவப்பட்டது. தொடர்ந்து தொடக்க ஜெபம், அன்னையின் புகழ்ச்சி பாடல் மற்றும் குருக்களின் சிறப்பு ஆசீர்வாதம் என திருத்தல குடும்ப விழா இனிதே ஆரம்பமானது. இத்திருநிகழ்வுகளில் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுக் கொண்டார்கள்.

❖ தாய்மார் சங்கத்திற்கான விவிலிய வசனம் எழுதுதல் போட்டி மற்றும் நாடக போட்டி செருப்பாலூர் ஆலயத்தில் வைத்து ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பங்குகளில் இருந்து தாய்மார்கள் மிகவும் உற்சாகத்துடனும்



ஆர்வத்துடனும் இந்த போட்டிகளில் போட்டியிட்டனர். நாடகத்திற்கான முதல் பரிசினை. செருப்பாலூர் பங்கும் மற்றும் நாடகத்திற்கான இரண்டாவது பரிசினை வேர்கிளம்பி பங்கும் பெற்று நமது மறைவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். விவிலிய வசனம் எழுதுதல் போட்டியில் சாரூர் பங்கை சார்ந்த திருமதி ஷீபா முதலிடமும், மாத்தார் பங்கை சார்ந்த திருமதி சஜினி மற்றும் திருமதி ஷைனி இரண்டாம் இடத்தையும் பிடித்து மறைவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

❖ ஆகஸ்ட் மாதம் 27-ஆம் தேதி MCYM இளையோருக்கான மறைவட்ட அளவிலான கலைப் போட்டிகள் செருப்பாலூர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மிகவும் உற்சாகத்துடன் எம் மறைவட்ட இளையோர்கள் போட்டிகளில் பங்கு பெற்று பரிசுகளை பெற்று பங்குகளுக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மறைமாவட்ட அளவிலான இளையோருக்கான போட்டிகள் பங்கேற்பார்கள்.

❖ மார்த்தாண்டம் மறைமாவட்ட திருத்தலமாகிய பெருவிளை புனித தேவசகாயம் திருத்தலத்தின் வளர்ச்சிக்காக நடத்தப்படும் மெகா குலுக்கலுக்கான மறைவட்ட கூட்டமானது மாத்தார் பங்கில் வைத்து மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை பிராங்ளின் மற்றும் மறைவட்ட குருக்களின் உடனிருப்போடு மதியம் 2 மணி அளவில் ஆகஸ்ட் மாதம் 17 ம் தேதி அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் குலுக்கல் ஒருங்கிப்பாளர் அருட்தந்தை சுனிஷ் குமார் அவர்கள் கலந்துகொண்டு வழி காட்டினார்கள். மறைவட்ட அளவில் அருட்தந்தை றோபின் அவர்கள் வழிகாட்டியாக தெர்வு செய்யப்பட்டார்கள்.

❖ மறைவட்ட அளவிலான MCA பொறுப்பாளர்கள் கூட்டமானது செறுப்பாலூர் பங்கில் 24-ம் தியதி மதியம் 2 மணிக்கு மறைவட்ட இயக்குனர் பேரருட்தந்தை மரிய அற்புதம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைவட்ட எம்.சி.ஏ பொறுப்பாளர்கள் அனைவரும் பங்கு பெற்று கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# களியக்காவிளை மறைவட்டம்

❖ களியக்காவிளை மறைவட்ட இளையோர் இயக்கத்திற்கான Youth Fest 2025 சூரியகோடு பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்டத்திலுள்ள அனைத்து இளையோர்களும் பங்கேற்றார்கள். வினாடி வினா, பேச்சுப்போட்டி, Mono Act, Mine, Cultural Fusion Dance ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் கோயிக்கல்தோப்பு அலகு முதல் இடத்தையும் ஆதிச்சவிளாகம் அலகு இரண்டாம் இடத்தையும் தட்டிச்சென்றது.

❖ களியக்காவிளை மறைவட்ட கன்வென்ஷன் 2025 இறைவார்த்தை ஆண்டையொட்டி களியக்காவிளை மறைவட்டம் சார்பாக ஒரு நற்செய்தி பெருவிழா நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் செப்டம்பர் மாதம் 13 மற்றும் 14 தேதிகளில் நடைக்காவு ஆலயத்தில் வைத்து மறைவட்ட அளவிலான ஒரு கன்வென்ஷன் நடத்தப்பட உள்ளது. அதற்கு முன்தயாரிப்பாக 24-ம் தேதி நடைக்காவு பேராலயத்தில் வைத்து ஒரு கூடுகையானது மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. மறைவட்ட கன்வென்ஷன் தொடர்பான விவாதங்களும் தீர்மானங்களும், அது நடத்தப்பட வேண்டிய முறைகளும் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# கொல்லங்கோடு மறைவட்டம்

❖ கொல்லங்கோடு மறைவட்ட இளையோர் இயக்கத்தினுடைய போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி சூரியகோடு பள்ளிக்கூட மைதானத்தில் வைத்து நடைபெற்றது. இதில் பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளாக கிரிக்கெட் மற்றும் கோ-கோ நடத்தப்பட்டது. கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு மறைமாவட்டத்திற்காக இளையோர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். இந்த போட்டிகளெல்லாம் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது.

❖ கொல்லங்கோடு மறைவட்ட இளையோர் இயக்கத்தின் புதிய இயக்குநர் தந்தையாக அருட்தந்தை சஜீவ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நடந்த இளையோர் கூடுகையில் வைத்து



அருட்தந்தை ஜெஸ்டின் அவர்களிடமிருந்து அந்த பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

❖ கொல்லங்கோடு மறைவட்ட அளவிலான இளையோருக்கான எழுத்துப்போட்டிகள் பாலவிளை பள்ளிக்கூடத்தில் வைத்து ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது.

❖ கொல்லங்கோடு மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூட்டமானது ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி தூய வேளாங்கண்ணி மலங்கரை கத்தோலிக்க ஆலயம் புன்னமூட்டுக்கடை பங்கில் வைத்து பிற்பகல் 2.30 மணிக்கு மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் மறைவட்டத்திற்குட்பட்ட அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். மறைவட்ட அளவிலான ஒரு நற்செய்தி பெருவிழா நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதனுடைய ஆலோசனைகள் எடுக்கப்பட்டு, வருகின்ற செப்டம்பர் மாதம் 26, 27, 28 ஆகிய தினங்களில் அந்த நற்செய்தி பெருவிழா நடத்தப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

# நாகர்கோவில் மறைவட்டம்

❖ தாய்மார் சங்கத்தின் மறைவட்ட அளவிலான எழுத்து மற்றும் கலைப் போட்டிகளானது ஆகஸ்ட் மாதம் 24-ம் நாள் பீச்ரோடு ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. மறைவட்டத்தின் பல பங்குகளின் தாய்மார்களும் மிகவும் உற்சாகமுடன் பங்கேற்ற இப்போட்டிகளில், விவிலிய வசனம் எழுதுதல் போட்டியில் முதல் பரிசை திருமதி ஜீனிதா பார்வதிபுரம் பங்கும், இரண்டாம் பரிசு திருமதி விஜி பீச்ரோடு பங்கும், திருமதி சிந்தியா மத்தியாஸ்நகர் பங்கும், மூன்றாம் பரிசு திருமதி அனு ஆளூர் பங்கும், திருமதி கனகம் பீச்ரோடு பங்கும் தட்டிச் சென்றது.

**யூதித்தின் நாடகம்** முதல் பரிசு ஆளூர் பங்கும், இரண்டாம் பரிசு கிறிஸ்துவிளாகம் பங்கும், மூன்றாம் பரிசு பீச்ரோடு பங்கும் தட்டிச் சென்றது.

மேலும் பங்கேற்ற அனைவருக்கும் ஊக்கப்பரிசும் வழங்கப்பட்டது. இவையனைத்தையும் மறைவட்ட தாய்மார் சங்க இயக்குநர் அருட்சகோதரி பிளாஸிடா SIC அவர்கள் சிறப்புற ஒழுங்கு படுத்தினார்கள்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை சஜீவ்
செப்டம்பர் 04



அருட்தந்தை ராபர்ட்
செப்டம்பர் 17



அருட்தந்தை றோபின்
செப்டம்பர் 17



அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத்
செப்டம்பர் 29



அருட்தந்தை ஜெறோம்
செப்டம்பர் 30



அருட்தந்தை ஜெறோம் காட்வின்
செப்டம்பர் 30



# இம்மாதம் நினைவு கூர

செப்டம்பர் 2025

1 – எட்டு நோன்பு ஆரம்பம்
இறைவாக்கினர் யோசுவா

2 – புனித சீமோன் தெஸ்தூனி

5 – புனித அன்னை தெரசா

7 – உருமாற்றத்திற்குப்பின் ஐந்தாம் ஞாயிறு

8 – தூய இறையன்னையின் பிறப்புத் திருநாள்
எட்டு நோன்பு நிறைவு

9 – புனித யோவாக்கீம், புனித அன்னம்மாள்

14 – சிலுவைத் திருநாள்

15 – தூய வியாகுல அன்னை

16 – புனித சிப்ரியான்

17 – 1930-ல் மறுவொன்றிப்பு அடைந்த
திரு. கிளீலேத் சாக்கோ அவர்களின் நினைவு (1970)

19 – புனித ஜனுவாரியுஸ்

20 – மலங்கரை கத்தோலிக்க மறுஒன்றிப்பு தினம்

21 – சிலுவைத் திருநாளுக்குப்பின் முதல் ஞாயிறு
தோமஸ் மார் எவுசேபியஸ், கீவற்கீஸ் மார் மக்காரியோஸ்,
யுஹானோன் மார் தெயடோஷியஸ் ஆண்டகையரின்
ஆயர் திருநிலைப்பாடு
பெதனி கன்னியர் சபை நிறுவப்பட்ட நாள் (1925)

23 – புனித பாத்ரெ பியோ

27 – புனித வின்செண்ட் தே பவுல்

28 – சிலுவைத் திருநாளுக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆண்டகையின் நினைவு


29 – தலைமை வானதூதர்களான புனித மிக்கேல்,
புனித கபரியேல், புனித இரபேல்

30 – புனித ஜெறோம்

5


8


15


23


27


30


## குருமட செய்திகள்



## DM Convent



## மறைபரப்புத்தளச் செய்திகள்



## Mids



## Health for One Million (HOM)



## Mar Ephraem College




## MCA







## மறைவட்ட செய்திகள்



களியக்காவிளை மறைவட்டம்



குலசேகரம் மறைவட்டம்



நாகர்கோவில் மறைவட்டம்